Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 01 சனிக்கிழமை (17-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 182

# இலங்கையின் உள்நாட்டுப்போரில் அமெரிக்காவுக்கு சம்பந்தம் இல்லை

## குற்றச்சாட்டுக்களை மறுத்து தகவல் சேவைப் பிரிவு அறிக்கை

லண்டன், ஓகஸ்ட் 17

இலங்கையின் உள்நாட்டுப் போரில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரச படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்கா சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா மறுத்துள்ளது;

இலங்கை இராணுவத்தில் இடைநிலைத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு விரிவான கல்வி முறை ஒன்றை வகுப்பதற்கு நான்கு அமெரிக்க உத்தியோகத்தர்கள் அண்மையில் உதவினார்கள்.

இவர்கள் தமது பணியை முடித்துக் கொண்டு தற்போது அமெரிக்கா திரும்பிஉள்ளனர்.

அமெரிக்கப்படையினர் இலங்கையில் எந்த ஒரு யுத்த நடவடிக்கையிலோ அல்லது யுத்தம் சார்ந்த செயற்பாடுகளிலோ ஈடுபடவில்லை என்று அமெரிக்க தகவல் சேவைப்பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் தகராறில் அமெரிக்க இராணுவப்படைகள் என்றுமே ஈடுபட்டது கிடையாது இனியும் ஈடுபடப் போவதில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மருத்துவம்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரேநாளில் 171 அகதிகள் தமிழகம் வந்து சேர்ந்தனர்

லண்டன், ஓக. 17

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் நடைபெறும் போர்காரணமாக தமிழ் நாட்டுக்கு அகதிகள் வருவது அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் மட்டும் 171 அகதிகள் இராமேஸ்வரத்துக்கு வெவ்வேறு குழுக்களாக வந்து சேர்ந்தனர்.

இன்னும் பலர் தனுஷ்கோடியை வந்தடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது

118 அகதிகள் ஏற்கனவே வந்துள்ளனர் என தமிழக முதல்வர் கருணாநிதி சட்டப் பேரவையில் தெரிவித்திருந்தார்.

இலங்கையிலிருந்து வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மன்னார் பேசாலையில் இருந்தே வந்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு வரை இவர்கள் தமிழக அகதி முகாம்களில் இருந்து நாடு திரும்பியவர்கள் ஆவர்.

இப்போது மீண்டும் அவர்கள் அகதிகளாக வந்துள்ளனர்.

இலங்கை போர் காரணமாக அகதிகள் வருவது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சகம் தன் கவலையை ஏற்கனவே இலங்கையிடம் தெரிவித்துள்ளது.

(இ-3)

## ஒலிபெருக்கியில் படையினர் மக்களுக்கு அழைப்பு

வவுனியா, ஓக. 17

நொச்சிமோட்டையில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண்களில் நிலைகொண்டுள்ள படையினர் மக்களை வவுனியா வருமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதாக பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

அந்த அறிவித்தலில் ''வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் குடும்பம் குடும்பமாகத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன'' என்றும் —

''எங்கள் பாதுகாப்பில் இருக்கலாம் வாருங்கள்'' என்றும் — படையினர் அழைப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## பட்டலந்த வதை முகாம்: முன்னாள் அமைச்சர்கள் இருவர் கைதாகலாம்!

கொழும்பு, ஓக. 17

கடந்த ஆட்சிக் காலத்தில் பட்டலந்த வதை முகாமில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக இரு முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படலாம் என்று ''லங்கா தீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களைக் கைது செய்வதற்கான அனுமதியை இரகசியப் பொலீஸார் சட்டமா அதிபரிடம் கோரி உள்ளனர் என்றும் —

அத்துடன் இந்த வதை முகாமில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக இரு பிரதிப் பொலீஸ் மா அதிபர்களையும் கைது செய்வது தொடர்பாக பொலீஸ் மா அதிபருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் — அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டலந்த வதை முகாம் தொடர்பாக நடந்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை அடுத்தே இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்காவும் கைதாகலாம் என்று ஏற்கனவே ஊகங்கள் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

ரணில் விக்கிரமசிங்கவின் தொகுதியான பியகமவிலேயே பட்டலந்த இருக்கிறது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே ஏ. எஸ். பி உட்பட ஏழு பொலீஸ் அதிகாரிகள் கைதாகி உள்ளனர்.

## அடுத்த வருடத்துக்கு முன் நாட்டில் சமாதானம்

### சந்திரிகா மீண்டும் தெரிவிப்பு

'' அடுத்த வருடத்துக்குள் நாட்டில் சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிடும் ''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கென அரசாங்கம் மேற்கொண்ட முக்காற்பங்கு முயற்சிகள் பெரும் பலனைத் தந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

குருநாகலில் நேற்று மாலை நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றினார்.

இலங்கைமக்கள் பல ஆண்டுகளாக தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணும் நோக்கத்துடன் 2 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினர்.

எத்தனை தடைகளும் நெருக்கடிகளும் ஏற்பட்டாலும் கூட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய பொறுப்பு பொதுமக்கள் ஐக்கியமுன்னணி அரசுக்கு இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## தமிழ் நாட்டில் தீவிரவாதிகளால் பாடசாலை பஸ் ஒன்று தகர்ப்பு

கொழும்பு, ஓக. 17

தமிழ்நாட்டின் சென்னை நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலை பஸ் ஒன்றை தமிழ் தீவிரவாதக் குழு ஒன்று குண்டு வைத்துத் தகர்த்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் எவரும் காயமடையவில்லை என்றும்—

''தமிழ் மக்கள் விடுலை முன்னணி'' என்ற அமைப்பு இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் பாடசாலைகளில் ஆங்கில, ஹிந்தி மொழிப் போதனைக்கு உடனடியாகத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரும் துண்டுப் பிரசுரங்களை இக்குழு அங்கு விட்டுச் சென்றுள்ளது.

சென்னையில் உள்ள ''செவன்டே அட்வென்டிஸ்ட்'' பாடசாலை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸே குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பான அமைப்பு காலஞ்சென்ற தமிழரசன் என்பவர் தலைமையில் இயங்கி வந்த ஒரு தீவிரவாத இயக்கம் என்றும்—

இவர்கள் கடந்த ஆண்டுகளில் இலங்கைத் தூதரகம், ரயில் நிலையம், தொலைக்காட்சி மற்றும் அஞ்சல் நிலையம் ஆகியவற்றில் குண்டு வைத்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## விசேட அடையாள அட்டை அலுவலகத்தில் தேக்கம்

### இன்றும் நாளையும் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் விசேட அடையாள அட்டைகள், உரியவர்களினால் எடுக்கப்படாது தேங்கிக்கிடக்கின்றன.

கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் இவை வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இன்னும் 2 ஆயிரம் அடையாள அட்டைகள் வரை உரியவர்களினால் எடுத்துச் செல்லப்படாது தேங்கிக்கிடக்கின்றன;

இதனை அடுத்து இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம
உங்கள் இல்லங்களில் நடைபெறும்

**மங்கள வைபவங்களுக்கு**

தகரப்பந்தலில் அலங்காரவில்லுப் பந்தல், சொக் கட்டான் பந்தல் அமைத்து, மணவறை, கதிரை, மாலை, மினுங்கல் சோடனை, ஒலி, ஒளி, அமைப்பு யாவையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

மல்லாகம், காளிகோவிலடி

**T.N. பந்தல் சேவையின்**

தரமான சேவையை தற்பொழுது
''தேவி வாசம்''
காங்கேசன்துறை வீதி,
தாவடி

(தாவடிச் சந்திக்கும் கோண்டாவில் மேற்கு சந்திக்கும் நடுப்பகுதியில் உள்ள குட்டிப்பிள்ளையார் கோவிலடி) என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

(42296)


தாக்குதல்களை அடுத்து

# எல்லைக் கிராம மக்களில் பலர் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வு

கொழும்பு ஒக. 17

புத்தளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள எல்லைக்கிராமமக்கள்பீதிகாரணமாக பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

மொனராகல மாவட்ட எல்லைக்கிராமங்களில் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினக்கல் தோண்டும் 30பேருக்கு மேல் சமீப காலங்களில் வழிமறிக்கப்பட்டு தமது உடைமைகளைப் பறிகொடுத்துள்ளனர்.

மற்றொரு சம்பவத்தில் இரு உழவு இயந்திரங்களில் வந்த சுமார் 20 பேரின் உடைமைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

காட்டுப் பகுதிக்கு மீண்டும் வரக்கூடாது என்று அவர்கள் பயமுறுத்தப்பட்டு விரட்டி அனுப்பப்பட்டுள்ளனர்.

இன்னொரு சம்பவத்தில் சைக்கிளில் வந்த இருவர் தமது பொருள்களையும் சைக்கிள்களையும் பறிகொடுத்துள்ளனர்.

தமது சைக்கிள்களைத் திருப்பித் தரும்படி இவர்கள் மன்றாடியதாகவும்- அப்போது பழைய இரு சைக்கிள்கள் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)


## தவறிவிட்டன

சின்னையா மகாலிங்கம் (510814207 V)

என்பவருடைய அடையாள அட்டை, கூட்டுத்தாபன விவரக் கோவைகள், றேடியோ, உடைமைகள், ஹம்பர் துவிச்சக்கரவண்டி ஆகியன நாவற்குழியில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சி. மகாலிங்கம்
உடுவில் V.C. முகாம்
மருதனார்மடம்.

(42284)



## NOTICE
## JAFFNA Y.M.C.A.

We wish to inform our members that our new premises is at St. John's Academy, Jaffna and invite members to renew their membership. New members will also be enrolled. Contact the y's Secretary at the new address.

Vice-President
Y. M. C. A. JAFFNA

(42291)



## கண்ணீர் அஞ்சலி

எமது மதிப்புக்குரிய அதிபர்
திரு. செ. சிவன்ரூபன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**செல்வரத்தினம் நாகரத்தினம்**

அவர்கள் 12- 8- 96அன்று சிவபதம் அடைந்ததை யிட்டுத் துன்புறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவ முதல்வர்கள், மாணவர்கள்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(42295)


## சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக 17

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் தெய்வீகக்கலை நிகழ்ச்சிகள் தொடரில் இன்று சனிக்கிழமை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு செ. ஸ்ரீனிவாசன் 'முருகன் பெருமை' குறித்துச் சொற்பொழிவாற்றுவார். (உ-4)

★ ★ ★

வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவிலில் நடைபெற்று வந்த திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் நடைபெறும்.

விசேட அபிஷேக ஆராதனை, திருமுறை ஓதுதல், விரிவுரை, திருமுறை வீதி வலம் என்பன இடம்பெறும். (அ)


## தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்
## குரு அபிஷேக ஆராதனை

1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெறும் அபிஷேக ஆராதனையில் பின்வருவோர் தென்னிந்திய திருச்சபைக் குருமார்களாகப் பேராயர் எஸ். ஜெபநேசனினால் அபிஷேகம் பண்ணப்படுவர்.

1. வண. பென்ஜமின் ஜெயராசா (உசன் திருச்சபை ஊழியன்)
2. வண. S. I ஆனந்தராஜன் (யாழ். நகரப்பணி ஊழியன்)
3. வண. மில்டன் சொலமன் [பல்கலைக்கழக மதகுரு]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

C.T றொபேர்ட்ஸ்,
செயலாளர் JD,CSI.

வட்டுக்கோட்டை.
11 - 8 - 96.

(42290)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**முருகேசு பாலசுப்பிரமணியம்**

(கணக்காளர், சீமாட்டி புடைவைக்கடல், யாழ்ப்பாணம், முன்னாள் பங்காளர், ஹற்றன் மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்)

காரைநகர் மாப்பாணபுரியைச் சேர்ந்த அமரர் திரு. முருகேசு பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கும் உறவினர்களுக்கும் இறைவனின் சாந்தியை வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைத் தினமான இன்று (17- 8- 96) சனிக்கிழமை சீமாட்டி புடைவைக்கடல் ஸ்தாபனம் முழுநாளும் மூடப்பட்டிருக்கும்.

சீமாட்டி புடைவைக்கடல்
உரிமையாளர்களும்
ஊழியர்களும்.

(42299)



## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் ஆவணி மாதம் 3 ஆம் நாள் **18-08-96** ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் இணைந்த சுப முகூர்த்தத்தில் முற்பகல் 10 - 45 மணி முதல் பகல் 12-31 வரையுமான துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில் இளவாலை ஆனை விழுந்தான் ஸ்ரீவிக்கின விநாயகப் பெருமானின் அநுக்கிரகத்துடன்

Dr திரு. திருமதி கணேசலிங்கம்
(பத்தாவத்தை, இளவாலை)
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**ரமேஷ்**
அவர்களுக்கும்

திரு. திருமதி சிவலிங்கம்
(லிங்கஸ்தான், கொல்லங்கலட்டி)
தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வி
திருநிறை செல்வி
**சிவாஜினி**
அவர்களுக்கும்

கனடாவில் நோத்யோர்க் பிரதேசத்தின் 30 Gordon Mackay Road இல் அமைந்துள்ள Luna Ball Room மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். அவ்வமயம் தாங்கள் தங்களது குடும்பத்தினருடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தும், நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்தும் சிறப்பிக்குமாறு பேரன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவைப் பெருமகிழ்வுடன் விரும்பும் ★

Dr திரு. திருமதி கணேசலிங்கம்
''சிவபதி'' பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Mr & Mrs Sivalingam,
134, Old Sheppard Avenue,
Willowdale, Ontario, Canada M 2J 3L9.

(42289)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின்

## இதய அஞ்சலி

அமரர்
**சிவக்கொழுந்து இராஜேந்திரன்**
(சட்டத்தரணியும், சமாதான நீதிவானும்)

முதறிஞர் வரிசையில் முதுபெரும் அறிஞன்
சாதல் வரினும் சளைக்காத செயல்வீரன்
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையிலே சான்றோன்
ஈண்டு அவர் பெருமை எடுத்தியம்பல் எளிதோ!

எம் இதயம் நீங்கா தவிசாளராய் ஆசானாய்
அறிவுரையும் ஆலோசனைகளும் தந்தவர்
இன்று,
எம்மை விட்டுப்பிரிந்த பெரியாருக்கு
எமது இதய அஞ்சலி.!

அவர்தம் பிரிவால் அல்லலுறும் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபங்கள்!
அமரர் அவர்களின் ஆத்ம சாந்திக்கு எமது
பிரார்த்தனைகள்.

அஞ்சலி நிகழ்ச்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
மஸ்கன் மண்டபம்
காலம்: **18- 08- 1996** ஞாயிற்றுக்கிழமை
பி. ப **2 00** மணி

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவிகள் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.
16. 08. 1996

(42286)

மாநிலங்களிடையே

## பதற்றத்தை ஏற்படுத்தும் கிருஷ்ணா நதி விவகாரம்

புதுடில்லி, ஓக. 17

கிருஷ்ணா நதியில் அணை கட்டும் விவகாரம் நாளுக்கு நாள் சிக்கலையும், பதற்றத்தையும் அதிகரித்து வருகிறது.

தமிழக முதல்வர் மு. கருணாநிதி உட்பட 4 முதல்வர்களின் முயற்சியால் அமைக்கப்பட்ட பொறியியல் வல்லுநர் குழு, சட்ட முறை அடிப்படைக்கு முரணானது என்று சட்ட அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.

மற்றொரு புறத்தில் — அமைக்கப்பட்டிருக்கும் குழுவுக்கு சட்ட பூர்வமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று ஆந்திர மாநிலம் கோரிக்கை வைத்துள்ளது.

ஆந்திர—கர்நாடக மாநில அரசுகளுக்கு இடையில் உருவாகியுள்ள பதற்றம் மற்றும் கர்நாடக ஜனதாதள் அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் முன்வைத்துள்ளமை ஆகியவை ஆளும் மத்திய அரசை நிலை குலைய வைத்துள்ளன எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. (இ-ε)

# ஊழல் பேர்வழிகள் மீது கடும் நடவடிக்கை!

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஓக. 17

''ஊழல் புரிந்தவர்களுக்கு எதிராக அவர்கள் அரசியல் வாதிகளாக இருந்தாலும் சரி, அதிகாரிகளாக இருந்தாலும் சரி — பாரபட்சமில்லாமல் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது; எதிர்காலத்திலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.''

இந்தியாவின் பொன்விழா சுதந்திர தினக்கொண்டாட்டங்களை ஒட்டி நேற்று முன்தினம் சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய போது தமிழக முதல்வர் மு. கருணாநிதி இவ்வாறு கூறினார்.

''தமிழகத்தில் நேர்மையான — லஞ்ச லாவண்யமற்ற — நிர்வாகத்தை அளிக்க எமது அரசு உறுதி பூண்டுள்ளது.

''தமிழ் நாடு அரசியல், குற்றவாளிகளின் கூடாரமாக மாறுவதற்கோ, குற்றவாளிகளே அரசியல் வாதிகளாக உருமாறுவதற்கோ முடிவுகட்டப்படும்.

''தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவும், மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-3)

சுதந்திர தின விழாவில்

## இனிப்பு உட்கொண்ட 360 குழந்தைகள் பாதிப்பு

புதுடில்லி, ஓக. 17

இந்தியாவின் சுதந்திர தினமான கடந்த வியாழனன்று மகாராஷ்டிரா மாவட்டத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு இனிப்பை வாங்கி உட்கொண்ட சுமார் 360 பாடசாலைக் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த இனிப்பில் விஷம் கலந்திருந்ததே குழந்தைகள் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தானே மாவட்டத்தில் பூர்ணா மற்றும் கோரிகவுன் தொடக்கப் பாடசாலைக் குழந்தைகளே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

இந்த இரு பாடசாலைகளும் ஒரே கூடையிலிருந்தே இனிப்பை வாங்கியதாகவும் கூறப்பட்டது.

பாதிக்கப்பட்ட நூறு குழந்தைகள் அன்றைய தினம் மாலையே ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர். (உ-5)

# பிரிவினைவாதத் தலைவர்களுடன் யெல்ட்ஸினின் தூதர் தொடர்ந்துபேச்சு

## செச்சின்யாவில் மோதல்கள் நீடிப்பு

செச்சின்யாவில் தனிநாடு கோரிப் போராடி வரும் கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி யெல்ட்ஸினின் தூதுவராகச் செயற்படும் ரஷ்ய பாதுகாப்புச்சபைத் தலைவர் அலெக்ஸாண்டர் லிய பேக்குக்கும் இடையில் குறொஸ்னியில் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கிளர்ச்சியாளர்களின் கோரிக்கை குறித்து ஆராய்ந்து தீர்வுகாண ஆலோசனைசபை ஒன்றை அமைக்கவும் —

போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க, கண்காணிப்புக் குழுவை அமைக்கவும் —

இநகரப்பு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கிளர்ச்சியாளர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஈடான தீர்வு யோசனை ஒன்றை ரஷ்ய அரசாங்கம் முன்வைக்காது விட்டால் மீண்டும் பெரும்போர் வெடிக்கும் அபாயநிலை ஏற்படும் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

அதேவேளை — நகரில் சிக்கியிருந்த ஏராளமான மக்கள் பாதுகாப்பு இடங்களுக்கு இடம் பெயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இந்தியாவில் 10 இலட்சம் பேருக்கு வேலை

ஒருங்கிணைந்த சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பத்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புவழங்கப்படும் என பிரதமர் தேவகௌடா தெரிவித்துள்ளார்.

சுதந்திரதினத்தையொட்டி நேற்று முன்தினம் டில்லி செங்கோட்டையில் பேசும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி

பெரிய கப்பல்கள் வந்து செல்லும் வகையில் தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழமாக்கி அதை உலகத்தரமுள்ள சரக்கு ஏற்றி இறக்கும் துறைமுகமாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத்திட்டம் 1996 – 97 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு வேட்பாளராக பொப்டோல்

சந்தியாகோ, ஓக. 17

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக குடியரசுக் கட்சி தனது வேட்பாளராக பொப்டோலை ஏகமனதாகத் தெரிவுசெய்துள்ளது.

அதிகாரங்களைக் குவிக்காத மத்திய அரசு, குறைந்த வரிகளை அறவிடுவது ஆகியன குடியரசுக் கட்சியின் கொள்கைகளாக உள்ளன. எனினும் இவை பொப்டோலின்தேர்தல் பிரசாரத்திற்குப் போதுமானவையாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரிய அளவில் மக்களிடையே பேசப்படுகிறது.

பொப்டோல் 2 ஆம் உலக யுத்தத்தில் பங்கேற்றுக் காயமடைந்த படைவீரராவார். பொப்டோலுக்கு 70 வயதாகிறது. ஆனால் வருகிற கிழமையே கிளிங்டன் தனது 50 வயதைப் பூர்த்தி செய்கிறார்.

சந்தியாகோவில் இடம்பெற்ற குடியரசுக் கட்சிக் கூட்டத்தில் பொப்டோலின் எதிர்ப்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆனால் எந்தவித கருத்து வேறுபாடுகளும் வெளியே வராமல் குடியரசுக் கட்சிக் கூட்டம் இனிதே நிறைவேறியது.

குடியரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரம் எதிர்பார்த்ததை விட நன்கு அமைந்த போதிலும் பலம் பொருந்திய தலைவரான பில் கிளிங்டனைத் தோற்கடிக்கவோ அல்லது அவரது பிரசாரத்திற்கு ஈடுகொடுக்கவோ அது போதுமானதா என்பதை அமெரிக்க வாக்காளர்களே தீர்மானிப்பார்கள் என்று பி.பி.ஸி. தெரிவித்தது. [இ-10]

## உலக அரங்கில்

அமெரிக்காவில் இடம்பெறும் ஒவ்வொரு சம்பவமும் வேட்பாளர்களுக்கு ஆதரவை அதிகரிக்கச் செய்யவும் ஆதரவை இழக்கச் செய்யவும் வழி வகுக்கின்றன.

வியட்நாம் யுத்த காலத்தின் போது பில் கிளிங்டன் இராணுவத்தில் சேர மறுத்தது

## 18 பெண்கள் உட்பட 33 பேர் பாகிஸ்தானில் பலி

இஸ்லாமாபாத், ஓக. 17

பாகிஸ்தானில் பெஷாவரில் உள்ள ஒரு கிராமம் அருகே இரண்டு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற வன்முறையில் குறைந்தது 33 பேர் இறந்தனர்; 7பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் 18பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாடிக் கட்டடம் ஒன்றில் திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது அப்பகுதியில் வன்முறை இடம் பெற்றதாகவும்—

அதனால் அந்தக் கட்டடம் இடிந்து வீழ்ந்தபோது இத்துயரச்சம்பவம் நேரிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக நடந்த மற்றும் ஒரு குழு மோதலில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். (உ-5)

# மன்னார் கற்பிட்டியில் விசேட படை நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஓக. 17

மன்னார், கற்பிட்டி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் வலுவடைந்துள்ளதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கடற்படையினர், விமானப் படையினர், பொலீஸார்கள் ஒன்றிணைந்து விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக பிரதேச உயர் பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி யாழ். வானொலி அறிவித்தது.

கடற்புலிகளின் முகாம்கள் மற்றும் கடற்புலி உறுப்பினர்களை கண்டு பிடிக்கும் நோக்கிலேயே இத்தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாம்.

இதற்கிடையே மன்னார்ப் பிரதேசத்தில் அமைந்திருந்த கடற்புலிகளின் மூன்று முகாம்கள் கடந்த வாரம் விமானப் படையினரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சுவிஸிலும் பார்சல் குண்டு! ஈழத் தமிழ்ப்பெண் காயம்!!

சுவிட்ஸர்லாந்திலும்பார்சல் குண்டு ஒன்று வெடித்ததில் இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் சுவிஸில் ரேப்பர் சுவில் என்ற இடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அங்கு கடை ஒன்றை நடத்தி வருபவர் பாலா. அவரது மனைவியான கௌரி என்பவரே குண்டு வெடிப்புக்கு இலக்கானார்.

இவர் வீட்டில் உள்ள தபால் பெட்டியைத் திறந்து, தமக்குரிய கடிதங்களை எடுத்துக் கொண்டிருந்த போது பெட்டிக்குள் இருந்த பார்சல் ஒன்று வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

திருமதி கௌரி பாலாவும், அவரது கணவரும் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்தக் குண்டு வெடிப்புக் குறித்து சுவிஸ் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். (உ)

# உல்லாசப் பயணிகளின் வருகை பெருவீழ்ச்சி!

கொழும்பு, ஓக.17

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் மும்முரமடைந்து வரும் போரினால், இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கணிசமான அளவு ஈட்டித் தரும் உல்லாசப்பயணத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உல்லாசப் பயணிகளின் வருகை, கடந்த ஆண்டில் இதே காலப் பகுதியில் இங்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது முப்பது சதவீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாக இலங்கை உல்லாசப் பயணசபையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தெகிவளையில் ரயிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளுக்கு கொழும்பு பாதுகாப்பான இடமல்ல என்று கொழும்பில் உள்ள பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் நாட்டுத் தூதரகங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

தெகிவளைக் குண்டுவெடிப்பில் பிறநாட்டு உல்லாசப் பயணிகள் எவரும் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்த பிரிட்டன் தூதரகப் பேச்சாளர் ஒருவர், தங்கள் நாட்டுப் பயணிகள் எவரும் கொழும்புக்கு வருவதையோ தங்குவதையோ தாங்கள் விரும்பவில்லை என்றும் கூறினார். (உ)

## மீண்டும் வகுப்புகள்

யாழ். திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் இயங்கி வந்த சிவானந்தர் சிறுவர் சமயப் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி தொடக்கம் அதே மண்டபத்தில் இலவச வகுப்புகள் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணிகள் விற்பனைக்கு

மல்லாகம் ஏழாங்கட்டை ஒழுங்கையில், வீட்டுடன் சேர்ந்த $18\frac{1}{2}$ பரப்பும் வேறொரு $6\frac{1}{2}$ பரப்பும் மல்லாகம் முகாந்திரம் ஒழுங்கையில் உள்ள ஐந்து பரப்பு, காணியும், விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர்: சு. ஸ்ரீபாஸ்கரன் ஏழாங்கட்டை ஒழுங்கை, மல்லாகம். (42235)

### விநியோகிக்கப் படுகிறது

Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் (சில்லாலை) இல. 372, பிரதான வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (பழைய இடத்தில்) மீண்டும் இயங்குகின்றது. சகல விதமான மருத்தெண்ணெய் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். மருத்தெண்ணெய் விநியோகம் மட்டும் நடைபெறும். (42165)

### வெங்காயச் செய்கை

தாள்கோதிப் புழுவின் தாக்கத்திலிருந்து வெங்காயப் பயிரைக் காக்க நிமியா ஊற வைத்த நீரை வடிகட்டி விசிறிப் பயன் காணுங்கள். நிமியாவை அண்ணா கோப்பிக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற். (சி- 2767)

### வாசகர்களுக்கு

தென்மராட்சியில் தரமான பல்வேறு விதமான தமிழ் - ஆங்கில நூல்களைக் குறைந்த கட்டணத்தில் இரவல் பெற்று வாசிக்க விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, இல. 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42251)

### காணி விற்பனை

கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, முதலாம் கட்டை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செல்வி பொ. அருந்தவமலர், முதலாம் கட்டை வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (42269)

### புலமைப்பரிசில் '96

புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அடுத்த 10 ஆவது பரீட்சை 18-8-96 ஞாயிறு காலை 9 மணி. புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, (இலுப்பையடிச் சந்தியருகில்) யாழ்ப்பாணம். (42282)

### உதயம் வாடகைக்கு

பீங்கால, ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் (வைற் கவுஸ் அருகில்) 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

### மணமகன் தேவை

உயர் குலத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணுக்கு மணமகன் உடன் தேவை. தொடர்பு:- செல்வி பொ. அருந்தவமலர், கிராம்புவில், முதலாம் கட்டை வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (42270)

### மாதாந்தப் பரீட்சை

ஆண்டு 3 இலிருந்து O/L வரை சகல பாடங்களுக்கான மாதந்தப் பரீட்சை வினாத் தாள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு- புதிய நாவலர் கல்வி நிலையம் நாவலர் வீதி, (இலுப்பையடிச் சந்தியருகில்) யாழ்ப்பாணம். (42281)

### காணவில்லை

ஜே சி இன சிகப்பு நிற முடைய சினைப் பசு ''K.J.'' குறியிடப்பட்டுள்ளது காணவில்லை. இதுபற்றிய தகவல் தருபவர்களுக்கு ரூபா 2 500/- சன்மானம் வழங்கப்படும். முகவரி:- சோ. குலசேகரம், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (42271)

### பாலர் ஆசிரியர்

பாலர் ஆசிரியர் பயிற்சி தபால் வழியில் நடைபெறுகிறது. க.பொ.த. (சா.த.) கடைசித் தகைமையாகும். உடன் விண்ணப்பிக்குக. பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. திரு. வீ. கே. கந்தசாமி, ''பழமுதிர்சோலை'', 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42277)

### தவறிவிட்டது

செ.தி. சகுந்தலாதேவி ஆகிய எனது J/88 கிராம சேவையாளரின் சின்னம் தட்டாதெருச் சந்திக்கும் கோவில் வீதிக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (42279)

## நெசவாளர் தேவை

துண்டுச் சம்பள அடிப்படையில் கைத்தறியில் நெசவு செய்யக்கூடிய இருபாலாரும் எமது சங்கத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்.

இருபாலை வீதி,
கோண்டாவில். (42292)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி இராமலிங்கம் அன்னம்மா

அவர்கள்

மலர்வு: 13–12–1924 உதிர்வு: 18–07–1996

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய் எம்மை எல்லாம் அன்போடு ஆதரித்து வளர்த்த தாயே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (17 - 08 - 96) நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புலோலி மேற்கு,
புலோலி. (சி-2759)



மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!
செவ்வாய், வியாழன், சனி
காலை 8-30 மணி முதல் பகல் 12-30 மணிவரை
யாழ். வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

## லாவண்யா

பல் மூக்குக் கண்ணாடி அகம்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2731)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாது வருடம் ஆடி மாதம் 04 ஆம் நாள் (19 - 07 - 1996) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி தம்பிராசா நாகபூஷணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-08-1996 ஞாயிற்றுக்கிழமை காலை இருபாலை தீர்த்தக்கரையிலும், பின்னர் வீட்டுக்கிருத்திய வைபவம் அன்னாரது இல்லத்திலும் நிகழவுள்ளதால் இவ்விரு வைபவங்களிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறும், பின்பு இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வே. தம்பிராசா (கணவன்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பரமேஸ்வரி அம்பாள் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [42275]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## ரி. ஆர். இராசகுலேந்திரம்

(J. P. All Island)
(தலைவர், வெண்தாமரை இயக்கம், யாழ்ப்பாணம்)

மலர்வு: 15–11–1948 உதிர்வு: 04–07–1996

வெண்டா மரையியக்கத் தலைவ ராக
விரும்பியாழ் நகரிலே சேவை செய்து
மண்மீட்பின் தன்பங்கை யாற்றி வந்த
மாண்புடைய இராசகுலேந் திரன்ஜே. பியும்
எண்ணாறு வயதுவரை வாழ்ந்த வாழ்வில்
இறுதி கண்டார் நாலேழு தொண்ணூற் றாறில்
கண்ணியமாய் இறுதியஞ் சலிக்கு வந்தோர்
கடமை செய்தோர்க் குளங்கனிந்த நன்றி தானே

● அமரரின் 45ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகளும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகளும் எமது இல்லத்தில் 17-08-96 இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பு:
திருமதி ரஞ்சினி இராசகுலேந்திரம் (மனைவி),
திரு. ஆர். இராசகுலசிங்கம் (மகன்),
செல்வி டிலினி றொசானா இராசகுலேந்திரம் (மகள்)

இல. 09 மூன்றாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி-2753)

## ஆண்டு - 5 புலமைப்பரிசில்' 96

எமது நிறுவனத்தில் 11 — 08 — 1996 நடைபெற்ற 12 ஆவது மாதிரிப் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகள் பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| செல்வன் ச. நடராஜசர்மா | — | சென். ஜோண் பொஸ்கோ | — 185 புள்ளிகள் |
| செல்வி ச. மயூரதி | — | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | — 180 ,, |
| செல்வி ப. உமாசாந்தி | — | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | — 172 ,, |
| செல்வன் நா. பானுகோபன் | — | நாவலர் மகா வித்தியாலயம் | — 168 ,, |
| செல்வன் ப. பிரணவன் | — | சென் ஜோன்ஸ் கல்லூரி | — 167 ,, |
| செல்வி வே. பாமா | — | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | — 165 ,, |
| செல்வி து. சுயாந்தினி | — | சென். ஜோண் பொஸ்கோ | — 164 ,, |
| செல்வி க. இளவஞ்சி | — | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | — 163 ,, |
| செல்வன் வி. விஜயராஜ் | — | சென். ஜோண் பொஸ்கோ | — 162 ,, |
| செல்வி பா. சுகன்யா | — | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | — 162 ,, |

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்

18 – 08 – 96 ஞாயிறு வழமை போல் 13 ஆவது மாதிரிப் பரீட்சை நடைபெறும்

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L, A/L மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்

பரீட்சைப்பகுதி BOND INSTITUTES
58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(42283)

உதயன்

## விவசாயம் வளர்ச்சியுற ....

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு இம்முறை உரிய வேளையில் கிடைக்குமா?

இப்படி ஒரு சந்தேகம் மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுவோர் மத்தியில் எழுந்துள்ளது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் விதை உருளைக்கிழங்கு இனமே யாழ்ப்பாணத்தில் அதிக விளைச்சல் தருவது.

ஆனால் அதனைத் தருவிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட விவசாயிகள் உணர்கிறார்கள்.

தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த நான்கு மாதங்களில், யாழ். விவசாயிகள் பலவிதமான பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு விளைபொருள்களையும் அறுவடை செய்து வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டு விவசாயிகள் தமது தொழிலை முழு அளவில், உரிய முறையில் செய்ய வாய்ப்பிருக்கவில்லை. அவர்களது பல்வேறு தொழிற் தேவைகளும் வேண்டிய அளவில் கிடைக்கவில்லை. உர வகைகள் தொடக்கம் எரிபொருள்கள் வரை எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடும் தடையும் இருந்தன.

இந்த நிலை நீக்கப்பட்டால், அவர்கள் எழுபது, எண்பதுகளில் விவசாய உற்பத்தியில் முன்னணியில் நின்ற நிலையை மீண்டும் விரைவில் எட்டி விடுவர். இதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் பெரிதும் தேவை.

யாழ்ப்பாண விவசாயிகளின் விடா முயற்சியையும், உழைப்புத் திறனையும் உணர்ந்து விவசாய அமைச்சர் எம். டி. ஜெயரத்னா யாழ் விவசாயிகளுக்கு உதவ முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் செழிப்பு மிகுந்த பகுதியான சிவந்த மண் பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக விவசாயம் செத்துப் போய் விட்டது. இராணுவ நடவடிக்கை, பாதுகாப்புக் காரணங்கள் என்ற பெயரில் பொன் விளையும் பூமி எனக் கருதப்படும் அந்தப் பிரதேசங்கள் உற்பத்தி எதுவுமின்றி கட்டாந்தரைகளாகவும் பற்றைக் காடுகளாகவும் மாறியுள்ளன. மல்லாகம் தொடக்கம் பலாலி வரையான இந்தப் பிரதேசத்தில் மீண்டும் விவசாயத்தை உயிர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

இப்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேச விவசாயிகளின் தொழில் தேவைகள் குறைவின்றிக் கிடைக்கவும் வகை செய்யப்பட வேண்டும்.

அதே போல விவசாயத்துக்குத் தேவையான உரம் உட்பட்ட இடுபொருள்கள் மற்றும் எரிபொருள்கள், உபகரணங்கள், சகல விவசாயிகளுக்கும் பாகுபாடின்றிச் சமமாகப் பங்கிடப்பட வேண்டும்.

இந்தப் பொறுப்பு முழுக்க முழுக்க உள்ளூர் அதிகாரிகளின் நேர்மையான, நியாயமான சேவையிலேயே உள்ளது. மக்கள் நலன் நாடிய நேரான சேவை இருப்பின் விவசாயம் மட்டுமன்றி இங்கு எல்லாத்துறைகளிலுமே துரித வளர்ச்சி காணலாம்.

முஸ்லிம் காங்கிரஸ் புதிய கோரிக்கை

# திருமலை துறைமுகத்தின் தென்பகுதி

# முஸ்லிம் அலகுடன் சேரவேண்டும்

திருகோணமலை, ஓக. 17

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் கட்சிகளிடம் புதிதாக ஒரு கோரிக்கையை முன் வைத்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் உள்ள பிரதேசமும் முஸ்லிம் அலகுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை ஆகும்.

அம்பாறையைத் தலைமையாகக் கொண்ட முஸ்லிம் நிர்வாக அலகொன்றை முஸ்லிம் காங்கிரஸ் கோரி வருவது தெரிந்ததே.

திருகோணமலை துறைமுகத்தின் தென்பகுதி முஸ்லிம்களுடன் இணைக்கப்படும் அதேநேரத்தில் துறைமுகத்தின் வடக்குப் பக்கத்தை வட மாகாணத்துடன் சேர்த்து தனி மாகாணமாக்கலாம் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் யோசனை தெரிவித்திருக்கிறது.

திருகோணமலைத் துறைமுகத்தின் தெற்குப் பிரதேசத்தை முஸ்லிம் மாகாண சபையுடன் இணைக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை நியாயப்படுத்துவதில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மூதூர்த் தொகுதியில் உள்ள முஸ்லிம் கிராமங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கிராமங்கள் முஸ்லிம் மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு இந்த யோசனை உதவும் என்று முஸ்லிம் காங்கிரஸ் சொல்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் பிந்திய இந்த நிலைப்பாடு குறித்து, முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்பு நடத்திய பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான அடுத்த வாரச் சந்திப்பின் போதும் இப்பிரச்சினை மீண்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று கூறப்படுகிறது. (இ-150)

## வருடாந்த மஹோற்சவம்

மூளாய் வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர் வரும் 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் அடுத்த நாள் பூங்காவன உற்சவமும் நடைபெறும். (அ)

## வேலை வங்கி விண்ணப்பம்: தெரிவுசெய்ய மூவர் குழு

வேலை வங்கி விண்ணப்பங்களை தெரிவு செய்து உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு மூவர் கொண்ட குழு ஒன்று யாழ். அரசாங்க அதிபரால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக உதவித் தேர்தல் ஆணையாளர் திரு சி. அருந்தவச்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பிரதேச செயலாளர் திரு க. குணராசா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நா. சிவபாதசுந்தரம் ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

எல்லா நியமனங்களும் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## பல்கலை. பாட நெறிகளில் மாற்றம் செய்யப்படும்

கொழும்பு, ஓக. 17

பல்கலைக்கழகத் துறை சார்ந்த பாடங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பூர்வாங்க அறிக்கை ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மாற்றத்தின்படி கலைத்துறை மாணவர்கள் தாம் விரும்பிய விஞ்ஞான பாடமொன்றைக் கற்பதற்கு இடமளிக்கப்படும். அவ்வாறே விஞ்ஞானம், வர்த்தகத்துறை மாணவர்கள் கலைத்துறைப் பாடமொன்றைக் கற்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

சர்வதேச மொழி ஒன்றைக் கற்பதற்கு சகல பல்கலை மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

உலகின் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைகளுக்கு பொருத்தமான கல்விமான்களை உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததென்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்தார். (உ-5)

## தமிழ்க்கட்சிகள் மீண்டும் ரணிலை சந்திக்கும்

கொழும்பு ஓக. 17

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசவுள்ளன.

அடுத்தவாரம் இச்சந்திப்பு இடம்பெறலாம்- இவ்வாறு கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே ஒரு தடவை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசின என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பரிசாரகராக பதவி உயர்வு

வடமராட்சி. ஓக. 17

யாழ் — கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சுமார் 45 சிற்றூழியர்கள் பரிசாரகர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இவர்கள் மூன்று மாத காலப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டு அப்பயிற்சியில் சித்தி பெற்றனர். (இ- 173)

# ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சை பாடநேர அட்டவணை

இவ்வாண்டுக்கான ஜி சீ ஈ (உயர்தரப்) பரீட்சையை அடுத்த மாதம் இரண்டாம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பரீட்சை சம்பந்தமான பாட நேர அட்டவணை கொழும்பில் வெளியாகியுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| திகதி | முற்பகல் | பாடம் | பிற்பகல் | பாடம் |
|---|---|---|---|---|
| 02-09 96 | 9-30 — 11-30 | விலங்கியல் I | 13-30 — 16-30 | சரித்திரம் I |
| | 9-30 — 12-30 | பிரயோக கணிதம் I | | |
| | | சரித்திரம் II | | |
| 03-09-96 | 9-30 — 12-30 | பிரயோக கணிதம் II | 13-30 — 16-30 | மனைப் பொருளியல் I |
| | | விலங்கியல் II | | |
| | | கிரேக்க உரோமநாகரிகம்I | | |
| | | சித்திரம் I | | |
| 04-09-96 | 9-30 — 12-30 | தூய கணிதம் I | 13-30 — 16-30 | மனைப் பொருளியல் II |
| 05-09-96 | 9-30 — 11-30 | தாவரவியல் I | 13-30 — 16-30 | தூய கணிதம் II |
| | 9-30 — 12-30 | தமிழ் I | | |
| 06-09-96 | 9-30 — 12-30 | தாவரவியல் II | 14-30 — 17-30 | சங்கீதம் - கர்நாடகம் I |
| | | தமிழ் II | | சங்கீதம் - மேலைத்தேயம் I |
| 07-09-96 | 9-30 — 11-30 | இரசாயனவியல் I | 13-30 — 16-30 | நாட்டியம் பரதம் I |
| | 9-30 — 12-30 | பொருளியல் I | | |
| 09-09-96 | 9-30 — 12-30 | இரசாயனவியல் II | 13-30 — 16-30 | சங்கீதம் - கர்நாடகம் II |
| | | நாட்டியம் - பரதம் II | | |
| 10-09-96 | 9-30 — 11-30 | பௌதிகவியல் I | | |
| | 9-30 — 12-30 | கணக்கியல் I | | |
| 11-09-96 | 9 30 — 12-30 | பௌதிகவியல் II | 13-30 — 16-30 | விவசாய விஞ்ஞானம் I |
| | | கணக்கியல் II | | கிரேக்க உரோமநாகரிகம்II |
| 12-09 96 | 9-30 — 12-30 | பொருளியல் II | 13-30 — 16-30 | விவசாய விஞ்ஞானம் II |
| 13-09-96 | 9-30 — 12-30 | சித்திரம் II | 14 30 — 17-30 | இந்து சமயம் I |
| | | ஆங்கிலம் I | | கிறிஸ்தவம் I |
| | | | | சமஸ்கிருதம் I |
| 14-09-96 | | | 13-30 — 16-30 | இந்துசமயம் II |
| | | | | கிறிஸ்தவம் II |
| | | | | சமஸ்கிருதம் II |
| 16-09-96 | 9-30 — 12-30 | அரசியல் மூலதத்துவங்கள் I | 13-30 — 16-30 | வர்த்தகமும் நிதியும் I |
| 17-09-96 | 9-30 — 12-30 | புவியியல் I | 13-30 — 16-30 | அளவையியலும் - விஞ்ஞான முறையும் I |
| 18-09-96 | 9-30 — 12-30 | புவியியல் II | 13-30 — 16-30 | இந்து நாகரிகம் I |
| 19-09-96 | 9-30 — 12-30 | புவியியல் III | 13-30 — 16-30 | இந்து நாகரிகம் II |
| 20 09-96 | 9-30 — 12-30 | சித்திரம் III | 14-30 — 17-30 | வர்த்தகமும் நிதியும் II |
| | | ஆங்கிலம் II | | |
| 21-09-96 | 9 30 — 12-30 | அரசியல்மூலதத்துவங்கள் II | 13-30 — 16-30 | நாடகமும் அரங்கியலும் I |
| 23-09-96 | 9-30 — 12-30 | நாடகமும் அரங்கியலும் II | 13-30 — 16-30 | அளவையியலும்- விஞ்ஞானமுறையும் II |
| 24-09-96 | 9-30 — 11-30 | நாடகமும் அரங்கியலும் III | | |

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சச்சிதானந்தம்

(S. L. E. A. S, Rtd Principal, Chief. Education, Officer and Editor Sivathondan.)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சச்சிதானந்தம், 11-08-96இல் அவுஸ்திரேலியாவில் சிவபதமடைந்து விட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சத்தியரஞ்சினி, (அயர்லாந்து), பாலரஞ்சினி. (அவுஸ்திரேலியா), சிவானந்தகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்பிகைராஜன், சிறிதரன், நிரஞ்சலி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற குமாரசாமி, நடராசா, (நியூசிலாந்து) ஆகியோரின் சகோதரரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 14-08-96இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன.

தகவல்:
குமாரசாமி நித்தியானந்தன்,
33, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[42280]

### பெருமாள்பிள்ளை யதீஸ்வரன்

அரியாலையைச் சேர்ந்த பெருமாள்பிள்ளை யதீஸ்வரன் டோகாவில் 7-8-96 ஆம் திகதி புதன்கிழமை அகாலமரணமானார்.

இவர் பெருமாள்பிள்ளை லோகாம்பாள் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், வனிதாவின் அன்புக் கணவரும், அரிகரனின் அன்புத் தந்தையும் வாசுகி, ராஜ்குமார், வாமதி, ஆகியோரின் சகோதரனும் பத்மநாதன் (டோகா), யோகேஸ்வரி தம்பதிகளின் பெறாமகனும் கரம்பனைச் சேர்ந்த காலஞ் சென்ற கிருஸ்ணபிள்ளை இராசம்மா தம்பதிகளின் மருமகனும், இளந்திரன், சிறீதரன், முரளீதரன், காலஞ்சென்ற மோகன், சுகிர்தா, மலர்விழி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17-8-96 இன்று சனிக்கிழமை 2 மணிக்கு கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. முரளீதரன்
(மைத்துனர்)
27 கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(42288)

### திருமதி கனகசபை சின்னத்தங்கம்

(மலாயன் பென்சனர்)

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகசபை சின்னத்தங்கம் 15-8-96 அன்று காலை 8 மணியளவில் காலமானார். இவர் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி செல்லப்பா தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா முருகேசு (புகையிரத நிலைய அதிபர்), திருமதி கந்தையா தங்கச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா கனகநாயகம், திருமதி சிவசுப்பிரமணியம் கமலாதேவி ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-8-96 இல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கந்தையா கனகநாயகம்
திருமதி சி. கமலாதேவி
''கனக வாசம்''
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(42293)

### அருளம்பலம் சகாதேவன்

மல்லாகத்தைச் சேர்ந்த அருளம்பலம் சகாதேவன் (முன்னாள் இ.போ.ச. உத்தியோகத்தர்) 15-08-96இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருளம்பலம் - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், மாதுசிரோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சு. சிவநேசன் (A.K.S. நகைமாளிகை முகாமையாளர்) - திருமதி புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், சிவாகரன் (பிரான்ஸ்), மாலதி (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரவீந்திரன் (பிரான்ஸ்), அருள்நீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கோபி, யூலியன், ஷகிலா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அ. மகாதேவன் (முன்னாள் அதிபர் - மல்லாகம் மகாவித்தியாலயம்), திருமதி பரமேஸ்வரி இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-8-96) பிற்பகல் 3-00 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி மா. சகாதேவன்
மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(42300)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 17-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மருதனார்மடம் நுண்கலைப்பிரிவு வளாகப் பகுதியில் 110 குடும்பங்கள்

## அடிப்படை வசதி எதுவுமின்றித் தவிப்பு

வலிகாமம் தெற்கு ஓக. 17

போதிய சுகாதாரமும், அடிப்படை வசதிகளும் இன்றி மருதனார்மடம் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு வளாகத்தில் தற்காலிகமாகக் குடியிருந்து வரும் மக்களால், இராமநாதன் கல்லூரி வளவில் இயங்கிவரும் பாடசாலைகளின் மாணவர்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய ஆபத்தும் இருப்பதாகப் பொதுச் சுகாதார பரிசோதகர் அச்சம் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியமர்வின் பின்னர் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் மயிலிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த 110 குடும்பங்கள் மேற்படி வளாக வளவில் குடியிருந்து வருகிறார்கள்.

இங்கு சுமார் 500-க்கு மேற்பட்ட மக்கள் நெருக்கமாக வாழ்வதால் நெருப்புக் காய்ச்சல், மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களால் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களால் இராமநாதன் கல்லூரியில் இயங்கிவரும் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் தொற்று நோய்கள் பரவலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையத்தில் உள்ள சுமார் 40-க்கு மேற்பட்ட குழந்தைகள் போஷாக்குணவு இன்மையால் கஷ்டப்படுவதாக நிலையத்தைச் சேர்ந்த ஒருவர் நமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவினரால், இவர்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் - உடுவில் கிழக்கிலுள்ள 40 பரப்புக் காணியொன்றை இதற்காக ஒதுக்கித் தரவும்- அதில் சிறு குடிசைகள் அமைப்பதற்கு வேண்டிய உதவிகள் வழங்கவும்- நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-152)

### ஹேமா பதவியை இழக்கலாம்

கொழும்பு, ஓக. 17

கொழும்பு மத்தி ஐ. தே. க. அமைப்பாளர் பதவியை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா இழக்கலாம் என்று '' தினமின '' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தொகுதி ரீதியாக இளைஞர் அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று ஐ. தே. க. செயலாளர் சுற்றறிக்கை அனுப்பி இருந்தார்.

ஆனால் ஹேமா இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

### சரத்சந்திர காலமானார்

கொழும்பு, ஓக. 17

சிங்கள நாடகக்கலையின் '' யுகபுருஷன் '' என்றழைக்கப்பட்ட பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர நேற்று அதிகாலை தனது 83 ஆம் வயதில் காலமானார். (இ-10)

### இலங்கையின்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தலைமை வகித்தல், இடஅமைப்புகள், தரையில் வழிகண்டு பிடித்தல் மற்றும் இராணுவ, விமானப் படைகளுக்கான நிபுணத்துவங்களைத் தழுவியதாக இருநாடுகளுக்கும் இடையிலான பயிற்சித் திட்டங்கள் இருக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம்மேற்கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவுவதாகதமிழீழவிடுதலைப்புலிகள் அண்மையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே அமெரிக்கத் தகவல் சேவைப் பிரிவு இந்த அறிக்கையை விடுத்தது. (இ-3)

### விசேட..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். பிரதேச செயலாளர் க.குணராசா தெரிவித்துள்ளார். (இ- 30)

### ஸ்கந்தா முன்னாள் அதிபர்

அமரர் உயர்திரு
**வி. சிவசுப்பிரமணியம் J.P.** அவர்கள்
B.A. B.Sc (Lond), F.R.G.S.

## நினைவஞ்சலிக் கூட்டம்

தலைவர்: திரு.ஆ. கமலநாதன்
B.A. Dip. in Ed. (Cey.)
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 19-08-1996 முற்பகல் 9.00 மணி

நிகழ்ச்சிகள்

1. வற்றாக்கை அம்மன் கோயிலில் பிரார்த்தனை.
2. அமரர் உயர்திரு வி. சிவசுப்பிரமணியம் அவர்களின் திருவுருவப் படம் ஊர்வலம்
3. திறந்தவெளி அரங்கு நாமஞ் சூட்டல்.

பிரதம உரையாளர்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புரையாளர்கள்

பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் அவர்கள்
(பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி எஸ். கிருஷ்ணராஜா அவர்கள்
(தலைவர், மெய்யியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி கே. கந்தசாமி அவர்கள்
(தலைவர், பௌதிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. எஸ். சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள்
(S. L. E. A. S. ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. ஏ. மகாலிங்கம் அவர்கள்
(பிரதேச செயலர், வலி.தெற்கு மேலதிக அரச அதிபர்)
திரு. எஸ். வேலாயுதம் அவர்கள்
(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. எஸ். இரத்தினராஜா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)
திரு. பீ. விக்னேஸ்வரன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், சங்கானை)

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலர்கள்,
கல்லூரி அபிவிருத்திச்சங்கம்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி/2765)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு செல்லத்துரை

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்லத்துரை 14-08-96 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆவரங்கால் செல்லத்துரை ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும், இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரின் பெரிய தந்தையும், கமலேஸ்வரியின் (மாலா) மாமனாரும், குமாரசாமி, நவமணி ஆகியோரின் சகோதரனும், ஜெ. அனிதா, ஜெ. நிர்மலன், ஜெ. சுஜித்தா, ஜெ. ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 15-08-96 வியாழக்கிழமை 1 மணியளவில் நுணாவில் மேற்கில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கு. ஜெயக்குமார்
(பெறாமகன்)
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/2772)